## காஞ்சிபுரம் மாவட்ட நீர் நிலைகளை சீரமைக்கும் தமிழக அரசின் குடிமராமத்து திட்டத்தின் செயல்பாடுகள்

தமிழ்நாடு அரசு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாநிலத்தில் உள்ள நீர் ஆதாரங்களை மேலாண்மை செய்திடவும், மழை நீரை சேமித்து, புதிய நீர் ஆதாரங்களை உருவாக்கி, நீர்நிலைகளை மீட்டெடுத்து நீர் பயன்பாட்டை முழுமையாக ஒழுங்குப்படுத்த பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள நீர்நிலைகளை புனரமைக்க குடிமராமத்து திட்டத்தின் கீழ் விவசாய சங்கங்கள், ஆயக்கட்டுதாரர்கள் மூலம் நேரடி நியமன அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 30 மாவட்டங்களில் 1519 குடிமராமத்து பணிகளை செயல்படுத்த ரூ.100.00 கோடி ஒதுக்கீடு செய்தார்கள். அதன்படி, காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், மணிமங்கலம் ஏரியில் 13.03.2017 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குடிமராமத்து திட்டப்பணிகளை தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் கீழ், ஏரிகளின் கரைகளை பலப்படுத்தப்பட்டு, ஏரிகள் ஆழப்படுத்தப்படுகின்றன. ஏரியின் கொள்ளளவு அதிகரிப்பதால், மழைக்காலங்களில் அதிக நீர் சேகரிக்கப்பட்டு, நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு, விவசாயத்தை செம்மைப்படுத்துவது தான் இத்திட்டத்தின் நோக்கம். இதன் மூலம் விவசாயிகள் பெரிதும் பயன்பெறுவார்கள். இத்திட்டம் பயன்பாட்டாளர்களான விவசாயி சங்கங்களின் பங்களிப்போடு செயல்படுத்தப்படுகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம் ஏரிகள் நிறைந்த மாவட்டமாகும். இங்கு விவசாயம் பெரும்பாலும் ஏரிப்பாசனத்தை கொண்டே நடைபெறுகிறது. பம்புசெட் விவசாயத்திற்கும் நிலத்தடி நீர்மட்டம் ஏரியில் நீர் இருந்தால் தான் பயன்தரும் நிலை. 2015ல் ஏற்பட்ட பெருமழை காரணமாக ஏரிகளின் கரைகளில் உடைப்பு ஏற்பட்டு மிகப்பெரிய வெள்ளச்சேதம் ஏற்பட்டது. சில ஏரிகளில் இருந்த தண்ணீர் முழுவதுமாக வீணாக வெளியேறியது. 2016ல் மழை பொய்த்ததால், வறட்சி ஏற்பட்டது. ஏரிகளும் வறண்டு போயின. இந்த நிலையை போக்கும் வகையில் தான் காஞ்சிபுரம் மாவட்டத்தில் குடிமராமத்து பணிகள் மூலம் ஏரிகள் ஆழப்படுத்தப்பட்டு ஏரிகரைகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் எதிர்காலத்தில் மழைநீரை அதிக அளவு சேமித்து விவசாயத்திற்கு மட்டுமின்றி நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவதன் மூலம் பம்புசெட் விவசாயமும் செழிப்புடன் நடைபெறும். பொது மக்களுக்கு குடிநீர் பிரச்சனையும் இருக்காது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2016–17ஆம் ஆண்டில் 49 பணிகள் ரூ.426.90 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, ஏரிகளை பலப்படுத்தும் இக்குடிமராமத்து பணிகள் நடைபெற்று வருகிறது. கடந்த 2015ஆம் ஆண்டில் பெய்த கனமழை காரணமாக ஏரிகளில் ஏற்பட்ட உடைப்புகளை சரி செய்வது மட்டுமின்றி மேலும் ஏரிக்கரைகளை பலப்படுத்தும் பணி குடிமராமத்து பணிகள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, காஞ்சிபுரம் தாலுக்கா, செவிலிமேடு, மேல் ஒட்டிவாக்கம், விஷார், தாமல் மற்றும் தேனம்பாக்கம் ஆகிய ஏரிகளில் ரூ.42.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிமராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 1572.83 ஹெக்டேர் பாசன பரப்பு பயன்பெறும்.

வாலாஜாபாத் தாலுக்காவில் களக்காட்டூர் ஏரி ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிமராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 163.97 ஹெக்டேர் பாசன பரப்பு பயன்பெறும்.

ஸ்ரீபெரும்புதூர் தாலுக்காவில் ஸ்ரீபெரும்புதூர் ஏரி, குண்டுபெரும்பேடு, எடயார்பாக்கம், போந்தூர், ஆதனூர், மணிமங்கலம், கஞ்சிவாக்கம் ஆகிய ஏரிகளில் ரூ.68.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிமராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 2124.90 ஹெக்டேர் பாசன நிலம் பயன்பெறும்.

உத்திரமேரூர் தாலுக்காவில் இராவத்தநல்லூர், சித்தனக்காவூர், அரசாணிமங்கலம், மலையாங்குளம், திருவாணிக்கோவில், மாம்பாக்கம் ஆகிய ஏரிகளில் ரூ.45.00 இலட்சம் குடிமராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 616.61 ஹெக்டேர் பாசன பரப்பு பயன்பெறும்.

மதுராந்தகம் தாலுக்காவில் மதுராந்தகம் ஏரி, கினார், புதூர், குமரவாடி, பழையனூர், வேடந்தாங்கல், விண்ணம்பூண்டி ஆகிய ஏரிகளில் ரூ.79.10 இலட்சம் மதிப்பீட்டில் குடிமராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 2135.07 ஹெக்டேர் பாசன நிலம் பயன்பெறும்.

செய்யூர் தாலுக்காவில் அரசூர் ஏரி, சித்தர்காடு சித்தேரி, வேடல் பெரிய ஏரி, செங்காட்டூர் ஏரி, பெரிய களக்காடி, கடுகுப்பட்டு பெரிய ஏரி, பாலூர், ஜமீன்பெரும்பாக்கம், நெடுமரம், வளவனேரி, மடயம்பாக்கம், சீக்கான்குப்பம், வேலூர் ஆகிய ஏரிகளில் ரூ.109.70 இலட்சம் மதிப்பீட்டில் குடிமராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 1379.33 ஹெக்டேர் பாசன நிலம் பயன்பெறும்.

செங்கல்பட்டு தாலுக்காவில் நந்திவரம் ஏரி, மண்ணிவாக்கம் ஏரி, முருகமங்கலம் ஆகிய ஏரிகளில் ரூ.28.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிமராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 462.12 ஹெக்டேர் பாசன நிலம் பயன்பெறும்.

திருப்போரூர் தாலுக்காவில் கழனிபாக்கம் பெரிய ஏரி, செம்பாக்கம், ஆலத்தூர், பயனூர், தண்டலம் பெரிய ஏரி ஆகிய ஏரிகளில் ரூ.46.70 இலட்சம் மதிப்பீட்டில் குடிமராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 955.75 ஹெக்டேர் பாசன நிலம் பயன்பெறும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2017–18ஆம் நிதியாண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்திற்காக ரூ.6 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் 36 பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு, நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

## பயனாளிகளின் கருத்து

### 1. மணிமங்கலம் பாசன சங்க தலைவர் கே.சி.யோகேஸ்வரன்.



மணிமங்கலம் இசா ஏரியினை குடிமராமத்து திட்டத்தின் மூலம் பாசனத்திற்கு எங்கள் சங்கத்தின் சார்பாக தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறோம். இத்திட்டத்தினால் ஏரிகரையின் மேல் இருந்த சீமை கருவேல மரங்களை வேருடன் அகற்றி கடந்த 2015–ஆம் ஆண்டு பாதிப்படைந்த ஏரிகரைகளை ஏரியின் நீர் பிடிப்பு பகுதியில் மேடான பகுதி தூர்வாரப்பட்டதால் ஏரியின் கொள்ளளவும் உயர்ந்துள்ளது. இத்திட்டத்தின் மேலும் விரிவுபடுத்தி ஏரியின் நீர்பிடிப்பு பகுதியின் மேடான பகுதிகளை தூர்வாரிட வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

### 2. தாமல் ஏரி விவசாய சங்க உறுப்பினர்கள்

தாமல் ஏரி வரலாற்றுச் சிறப்புமிக்கது. இந்த ஏரியின் வழியாக தான் வேகவதி ஆறு பயணிப்பதாக காலம் காலமாக எம்முன்னோர்கள் கூறி வருகின்றனர். அந்த அளவிற்கு ஏரியின் நீர்மட்டம் அனைவருக்கும் வற்றாத செல்வமாக இருந்து விவசாயத்தின் முதுகெலும்பான நீரை வாரி வழங்கி, செம்மைக்கு பெயர்போன பகுதியாக வைத்திருந்தது. சில வருடங்களாக ஏரி பராமரிப்பின்றி நீரின் கொள்ளளவு குறைந்து, விவசாயம் மேற்கொள்ள கடினப்பட்டு வந்தோம். தற்போது மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் நடைபெற்று வரும் தமிழக அரசின் குடிமராமத்து திட்டப் பணிகளால் எங்களது ஏரி தூர்வாரப்பட்டு நீரின் கொள்ளளவு பழைய கொள்ளளவை விட அதிகரிக்கும்படி, பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் அதிகப்படியான நீரை தேக்கி, அதிக நாட்கள் விவசாயத்தை தங்குதடையின்றி செய்து, இலாபமீட்டி, எங்களது குடும்பம் வறுமையின்றி வாழ வழிவகுக்கும்.



**3. மலையாங்குளம் ஏரி விவசாய சங்க உறுப்பினர்கள்**

எங்கள் பகுதியை சுற்றி சுமார் 20 கி.மீட்டருக்கு எந்த நகர்புறப் பகுதியும் இல்லை. நாங்கள் காலம் காலமாக விவசாயத்தை நம்பி தான் வாழ்ந்து வருகிறோம். தற்போது நடைபெற்றுள்ள தமிழக அரசின் குடிமராமத்து பணிகளால் எங்கள் ஊரின் முக்கிய ஆதாரமாக திகழும் மலையாங்குளம் ஏரி தூர்வாரப்பட்டு, பயன்பாட்டிற்கு வந்துள்ளது. அதனால் பல்வேறு பயன்பாடுகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. காலகாலமாக நாங்கள் நம்பிவரும் விவசாயம் தொடர்ந்து நடக்கும். மேலும் எமது பகுதிக்கு குடிநீருக்கு ஏரி, குளம் மற்றும் கிணற்று நீரையும் பயன்படுத்தி வருகிறோம். அதனால் ஏரியின் கொள்ளளவு அதிகரித்து, அதிகமாக நீர் தேக்கப்படுவதால் குடிநீர் பிரச்சனையும் தீர்ந்துள்ளது.

மேலும் விவசாயத்தின் ஒரு பகுதியாக திகழும் ஆடு, மாடு, கோழி வளர்ப்புகளுக்கு தேவையான நீராதாரம் கிடைத்துள்ளது. அதனை தொடர்ந்து குடிசைத் தொழில்கள் நடைபெற முக்கிய தேவையான நீர் தங்குதடையின்றி கிடைக்கிறது. இதனால் எம்பகுதி மக்களும், நாங்களும் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறோம்.

**4. மதுராந்தகம் ஏரி விவசாய சங்க உறுப்பினர்கள்**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பெரிய ஏரிகளில் எங்களது ஏரியும் ஒன்று. எங்களது ஏரியில் நீரின் கொள்ளளவு குறையும் நிலை ஏற்பட்டால் சுற்றியுள்ள மற்ற பகுதியின் சிற்றோரிகள் மற்றும் குளம், கிணறு, குட்டைகளில் நீர் வற்றி, அப்பகுதி மக்கள் பெரிதும் பாதிப்புக்கு ஆளாகும் நிலை ஏற்படும். மதுராந்தகம் ஏரி, மதுராந்தகத்தின் விவசாயிகளுக்கும் மட்டுமின்றி, சுற்றியுள்ள ஊராட்சிகளின் விவசாயிகளுக்கும் நேரடியாகவும், மறைமுகமாகவும் பயன்பெற்று வருகிறது. குறிப்பாக தற்போது நடைபெற்றுள்ள தமிழக அரசின் ஏரி தூர்வாரி, ஆழப்படுத்தி, கரையை பலப்படுத்தும் பணியால் எம்பகுதி மக்களையும் சேர்த்து, மற்ற ஊராட்சி மக்களின் வாழ்விலும் நல்லதொரு திருப்பத்தை ஏற்படுத்தி, அதிகப்படியான விவசாயிகளின் வாழ்விற்கு ஒளியேற்றி உள்ளது.

**5. தனியொரு விவசாயி – ஏரிபாசனம் ( V.T.மணி தாமல்)**



என் பெயர் மணி, என் குடும்பம் விவசாயத்தை நம்பி உள்ளது. நான் விவசாயம் செய்து வருவாய் ஈட்ட ஏரி நீரை நம்பி உள்ளேன். எங்களது ஊரியில் பெரும்பாலும் ஏரி பாசனத்தை

நம்பித்தான் உள்ளோம். குறிப்பாக எனது வயதான அம்மா–அப்பா, மனைவி, எனது 2 குழந்தைகள் என அனைவரும் நல்ல உடைகளை உடுத்தவும், மூன்று வேளை பசியின்றி உண்ணவும் போதிய வருமானம் தேவை. அதற்கு விவசாயத்தை தான் நம்பி உள்ளோம். மிக முக்கியமாக எனது குழந்தைகள் நல்ல கல்வி பெறுவதற்கு உரிய வருவாயையும், அன்றாட தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் விவசாயத்தை தான் நம்பி உள்ளோம். அந்த விவசாயமே எம்பகுதி ஏரியைத் தான் நம்பி உள்ளது. ஆக எமது குடும்பமே ஏரி நீரினை தான் நம்பி வாழ்கிறது. தமிழக அரசின் அற்புதமான திட்டம் இந்த குடிமராமத்து பணி மூலம் ஏரியை தூர்வாரி, ஆழப்படுத்தி, கரைகளை பலப்படுத்துவது. அப்பணி எமது ஏரியில் நடைபெற்றவுடன் எனக்கும், எமது குடும்பத்தினருக்கும் மிகுந்த சந்தோசத்துடன் நம்பிக்கையும் வந்துவிட்டது வறுமையில் இருந்து விடுபட்டுவிட்டோம் என்று இத்திட்டத்தால் எங்களது ஊரியில் உள்ள என்னை போன்ற விவசாயிகள், அவர்களின் குழந்தைகள் என அனைவரின் முகத்திலும் மகிழ்ச்சி கலந்த புன்னகையை பார்க்க முடிகிறது.

**6. தனியொரு விவசாய – கிணற்று பாசனம் ( பிரகாஷ்)**



என் பெயர் பிரகாஷ், நான் கிணற்று பாசனத்தை நம்பி விவசாயத்தை செய்து வருகிறேன். எனக்கு ஏரி பாசனத்தை பற்றி சிறிதும் கவலையில்லாமல் இருந்தேன். ஒவ்வொரு நாளும் கிணற்றின் நீறூற்றால் நல்ல நீர் தேக்கம் பெற்று, தினந்தோறும் எனது பயிர்களுக்கு நீர் பாய்ச்சி நல்ல வருவாயை ஈட்டி வந்தேன். ஆனால் கடந்த சில மாதங்களுக்கு முன்பு எனது கிணற்றில் படிப்படியாக 10 அடி, 15 அடி, 30 அடி என நீர் மட்டம் குறைந்து கிணற்றில் நீர்தேக்கமின்றி சிரமப்பட்டேன். அதன்பின்பு கடனுடன் வாங்கி, கிணற்றினுள் ஆழ்துளை பம்பு (ப்போர்) போடப்பட்டு, நீர் தேக்கத்தை ஏற்படுத்தினேன். அப்போது சர்வ சாதாரணமாக 15 அடிக்குள் கிடைக்க வேண்டிய நீர், சுமார் 80 அடியை தாண்டியும் போதுமான நீர் கிடைக்காதது அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. அதன்பின்பு தான் ஏரியின் நீர் தேக்கம் எவ்வளவு முக்கியம் என்பது நன்கு உணர்ந்தேன். எனது கிணற்றிற்கு தேவையான நீர்மட்டத்தை ஏரியின் நீர் கொள்ளளவு தான் நிர்ணயிக்கிறது என்பதை

அறிந்தேன். தற்போது தமிழக அரசின் இத்திட்டத்தால் எனது ஊரின் ஏரியானது சீரமைக்கப்பட்டுள்ளது. அதனால் எனது கிணற்றில் நீர்மட்டம் குறையாமல் இருக்கவும், எனது விவசாயம் தொடர்ந்து தடையின்றி நடக்கவும் தமிழக அரசு பெரிதும் உதவியுள்ளது. தற்போது உணர்ந்து கொண்டேன் விவசாயத்திற்கு உரிய அனைத்து பாசன நீரையும் சரியான முறையில் தேக்கி, சரியான நேரத்தில் வழங்குவது ஏரி தான். அந்த ஏரியை தூர்வாரி எம்பகுதியைச் சேர்ந்த என்னை போன்ற விவசாயிகளுக்கு உதவிய தமிழக அரசுக்கு நன்றி கூறி, மகிழ்கிறோம்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.